
# 15

# அல்குர்ஆன் அருளப்படல்

இற்றைக்கு பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரேபியா எங்கும் அறியாமை இருள் படர்ந்திருந்தது. அங்கு வாழ்ந்தோர் பாவங்களின் மொத்த உருவமாக திகழ்ந்தார்கள். இக்காலப் பிரிவில் அவர்களிடையே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்தார்கள். இயல்பிலேயே நற்பண்புகள் குடிகொண்ட அவர்கள் அம்மக்களின் அறியாமை கண்டு ஆழ்ந்த கவலை கொண்டார்கள். அவலத்தில் இருந்தும் பஞ்சமா பாதகங்களிலிருந்தும் அவர்களை விடுவிக்க வழி தேடினார்கள். அவர்கள் வாலிப வயதை அடைந்து சமூகப் பொறுப்புக்களைச் சுமக்கும் பக்குவம் வந்தபோது சமூகம் பற்றிய அக்கறையும் கவலையும் மேலும் அதிகரித்தது. தொடர்ந்தும் சீர்திருத்தம் பற்றியே சிந்திக்கலானார்கள்.

மக்காவில் இருந்து சுமார் மூன்று மைல் தொலைவில் ஹிரா என்ற பெயரில் ஒரு குகை இருந்தது. பெரும்பாலான நேரங்களில் தனியாகச் சென்று தனது சமூகத்தின் நிலை குறித்தும் அவர்களுக்கான விமோசனம் குறித்தும் சிந்திக்கலானார்கள்.



ஹிரா குகை

உண்ணவும் பருகவும் தேவையானவற்றை உடன் எடுத்துச் சென்றார்கள். அவை தீர்ந்த போது அவர்களே வீடு வந்து மீண்டும் எடுத்துச் சென்றார்கள். சிலபோது மனைவி கதீஜாவும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

அப்போது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். நாற்பது வயது பூர்த்தியாவதற்கு ஆறு மாதங்கள் இருந்த வேளையில் அவர்களுக்குத் தெளிவான கனவுகள் தென்பட ஆரம்பித்தன. அவை அச்சொட்டாக நடைபெறுவனவாகவும் இருந்தன.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நாற்பது வயது பூரணமாகியது. அன்றும் அவர்கள் வழமை போன்று ஹிராவில் தங்கி இருந்தார்கள். அன்றைய நாள் அந்தி சாய்ந்துகொண்டிருந்தது. ஹிராவையும் அதனைச் சூழ இருந்த பகுதிகளையும் இருள் கவ்வ ஆரம்பித்தது. அவ்வேளை இருளை ஊடறுத்தவாறு பாய்ந்து வந்த பேரொளிப் பிளம்பொன்று அப்பிராந்தியத்தையே பிரகாசமடையச் செய்தது.

ஒளி வடிவில் வந்த ஓர் உருவம் ஹிராவில் தனிமையாக இருந்த முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கட்டித் தழுவி 'இக்ரஃ' (ஓதுவீராக) எனக் கூறியது. தனக்கு ஓதத் தெரியாது என அவர்கள் கூறியபோது, மீண்டும் அந்த உருவம் 'இக்ரஃ' எனக் கூறியது. அப்போதும் அவர்கள் அதே பதிலைக் கூறினார்கள்.

எனவே அந்த உருவம் மூன்றாவது தடவையாகவும் அவர்களைக் கட்டித் தழுவி 'இக்ரஃ' என்றது. இப்போதும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனக்கு ஓதத் தெரியாது என்று பதிலளிக்கவே, அந்த உருவம் ஸூரா அலக்கின் முதல் ஐந்து வசனங்களை ஓதிக்காட்டி அவற்றை மீண்டும் ஓதுமாறு கூறியது. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவற்றைப் மனனமிட்டுக் கொண்டார்கள்.

இவ்வாறுதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிராவில் இருந்தபோது அல்குர்ஆன் முதன் முதலில் அருளப்பட்டது. ஹிராவில் ஒளி வடிவில் தோன்றிய ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்குர்ஆனைக் கற்றுக் கொடுத்தார்கள். இதன் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு நபியாகப் பிரகடனப்படுத்தப்பட்டார்கள்.

அல்லாஹ் மக்காவிலும் மதீனாவிலுமாக சுமார் 23 வருட காலம் அல் குர்ஆனை அருளினான். ஒரே முறையில் அருளப்படாமல் சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் ஒரு வசனமாகவும் சில வசனங்களாகவும் ஸூராக்களாகவும் அல்குர்ஆன் அருளப்பட்டது.

வஹி அருளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உடலில் மாற்றங்கள் நிகழ்ந்தன. தன்மீது அருளப்பட்ட வஹியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாமும் மனனமிட்டு தம்மோடு இருக்கும் மனைவிமார் மற்றும் தோழர்களுக்கும் எடுத்துக் கூறுவார்கள். அவர்களும் அவற்றை அப்படியே மனனமிட்டுக் கொண்டார்கள். அத்துடன் குத்தாபுல் வஹீ எனப்படும் வஹீ எழுதுனர்களாக நியமிக்கப்பட்டிருந்த ஸஹாபாக்களை அழைத்து உடனுக்குடன் அவற்றை எழுதச் செய்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் மனனமிடல், எழுதி வைத்தல் என்ற இரண்டினூடாகவும் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்டது.

**பயிற்சி**

சுருக்கமான விடை தருக.

1. முதன் முதலாக வஹி அருளப்பட்ட முறையினைத் தொகுத்து எழுதுக.
2. ஹிராக் குகை ஏன் முக்கியத்துவம் பெறுகிறது?
3. முதலில் அருளப்பட்ட வசனங்கள் எந்த ஸூராவில் அமைந்துள்ளன?
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏன் ஹிராவுக்குச் சென்றார்கள்?
5. 'இக்ரஃ' என்ற சொல்லின் பொருள் யாது?

**செயற்பாடு**

அல்குர்ஆனின் முதலில் அருளப்பட்ட ஐந்து வசனங்களையும் அரபு மொழியில் எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.